


வன்முறை என்பது
இருபுறமும்
கூர்மையுள்ள ஆயுதம்.

- அறிஞர் அண்ணா

கோயம்புத்தூர் மாவட்டம் - ஆனைமலை, கோட்டூர் அருகில் சாலை விபத்து: உயிரிழந்த

# பெண் காவல் உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ. 2 -**

**கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, கோட்டூர் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பான முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி கிருஷ்ணவேணி (வயது 51) (க/ப.சக்திவேல்) என்பவர் நேற்று (31.10.2024) மாலை அங்கலக்குறிச்சியிலுள்ள தனது வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் வால்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு பணிக்கு சென்று கொண்டிருந்தபோது ஆனைமலை வட்டம், கோட்டூர் அருகில் எதிரே வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி கிருஷ்ணவேணி அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருமதி கிருஷ்ணவேணி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



புத்தகத்தில் உலகைப்
படித்தால் அறிவு
செழிக்கும்;
உலகத்தையே புத்தகமாகப்
படித்தால் அனுபவம்
தழைக்கும்"

...கலைஞர்...

இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் - மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, நவ. 2-**

**இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பான - முதல்வரின் அறிக்கை வருமாறு:-**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்துவந்த சரவணன் (வயது 36) (த/பெ.வேலு) என்பவர் 31.10.2024 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் பரமக்குடி நகரில் இரவு நேர ரோந்துப் பணியின்போது கீழே விழுந்த இரும்புக் கம்பத்தை அகற்றும்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உதவி ஆய்வாளர் சரவணன் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

உதவி ஆய்வாளர் சரவணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

வைகை ஆற்றிலிருந்து

# காரியாபட்டி, மல்லாங்கிணறுக்கு ரூ.75 கோடியில் குடிநீர்த் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.2-

வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை ரூ.75.85 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு, வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு விருதுநகர் மாவட்டத்தில் உள்ள காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் 29,000 மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தது.

இத்திட்டத்திற்கு தேவையான நீர், வைகை ஆற்றில் மேலக்கால் அருகில் கொடிமங்களம் தடுப்பணை மேல்புரத்தில் அமைக்கப்படும் 11 நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்பட்டு காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், சுமார் 36,000 மக்கள் பயன்பெறுவர்.

முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை ரூ.75.85 கோடி மதிப்பீட்டில் மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF), கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT) மற்றும் மூலதன மானிய நிதி (CGF) ஆகிய நிதியாதாரங்களின் கீழ் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், காரியாபட்டி பேரூராட்சி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சி ஆகியவற்றின் குடிநீர் தேவையை மேலும் திறம்பட எதிர்கொள்ளும் வகையில் அமைகிறது.

# முதல்வரின் பாராட்டு; 'அமரனின்' பெரும் வெற்றிக்கு அறிகுறி!

## கலைஞானி கமல்ஹாசன் நன்றி!



சென்னை, நவ. 2-

கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், "முதல்வரின் பாராட்டு; 'அமரன்' திரைப்படத்தின் பெரும் வெற்றிக்கு அறிகுறி" என்று குறிப்பிட்டுள்ளார்.

கலைஞானி கமல்ஹாசன் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**எங்களது அழைப்பை ஏற்று 'அமரன்' திரைப்படத்தைப் பார்த்து ரசித்ததோடு, படத்தையும், அதில் பங்களிப்பாற்றிய கலைஞர்களையும் மனதாரப் பாராட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர், என் அன்பிற்கினிய நண்பர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும்,**

**தமிழ்நாட்டின் துணை முதல்வர், என் அன்பு இளவல் உதயநிதி அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.**

**முதல்வரின் பாராட்டு; அமரனின் பெரும் வெற்றிக்கு அறிகுறி.**

இவ்வாறு அப்பதிவில் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மானாமதுரை சிப்காட்டில் விரைவில் தொழிற்சாலைகள்!

# சிவகங்கை மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டமாக உருவாக்கப்படும்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சிவகங்கை, நவ.2-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் வளாகத்தில் தொழில் முனைவோர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கை மாறன்,நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய கவுன்சிலர் எம்.அண்ணாதுரை முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் துரை. ராஜா மணி மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றிய குழு துணைத்தலைவர் முத்துச்சாமி உட்பட தொழில் முனைவோர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

இந்த கூட்டத்தில் தொழில் துறை அமைச்சர் டி. ஆர்.பி ராஜா பேசியதாவது:

தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் பதவி ஏற்ற 3அரை



ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொழில் துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க.ஆட்சியில் தமிழகத்தில் எவ்வித தொழில் முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதை மூன்றரை ஆண்டுகளில் முதல்வர் அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்து சீரமைத்து வருகிறார். சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை காநாடு காத்தான் மற்றும் பல்வேறு பகுதியில் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும் என்று இந்த மாவட்ட அமைச்சர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் எம்.எல்.ஏ. தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் என்னை சந்திக்கும் போதெல்லாம் வலியுறுத்தி வந்தார்கள். சட்டமன்றத்திலும் கோரிக்கை வைத்து வந்தார்கள்.

இங்குள்ள சிப்காட் மிகவும் பழமை வாய்ந்தது . இங்கு தொழில்கள் ஏற்கனவே துவங்கப்பட்டு தற்பொழுது சற்றுதொய்வாக உள்ளது. அதை சீரமைக்கவும் புதிதாக தொழில்கள் தொடங்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழக முதல்வர் பதவியேற்று பத்து லட்சம் கோடிக்கு மேல் முதலீடுகள் வந்துள்ளது. ஆனால் நமது முதல்வர் துணை முதல்வர் ஆகியோர் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு இதன்மூலமாக கிடைத்தது என்று பார்க்கிறார்கள். முதல்வர் அவர்கள் துணை முதல்வர் ஆகியோர் தொழிற்சாலைகள் அந்தந்த பகுதியில் வேலைவாய்ப் பின்றி உள்ள இளைஞர்கள் குறிப்பாக பெண்களை வைத்து அவர்கள் திறமைக்குஏற்ப தொழிலை தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் அந்தந்த பகுதியில் வேலை வாய்ப்பு இளைஞர்கள் பட்டதாரி இளைஞர்கள் பெண்கள் ஆகியோர்களுக்கான தொழில்கள் துவங்குவது பற்றி ஆலோசனை நடைபெற்று வருகிறது .

அதன் பேரில்சிறிய தொழிற்சாலைகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தொழில் துவங்கிட அனைத்து வசதிகளை அரசாங்கம் செய்து தருகிறது . தமிழக முதல்வரின் ஒரு மில்லியன் டாலர் வளர்ச்சி என்பது தான் அவரது கனவாக உள்ளது. அதை நாம் நிறைவேற்ற வேண்டும். சிப்காட்டில் நான் அமைச்சராக பதவி ஏற்றபின் மாதம் தோறும் குறை கேட்கும் முகாம் நடைபெற்று வருகின்றது

**கலைஞர் தொடங்கிய திட்டம்!**

இதன் மூலம் தொழில் முனைவோர்களின் குறைகள் கேட்டு அந்த குறைகள் தீர்த்திட வாய்ப்பாக அமைகிறது. பொது மக்களை சந்தித்து இப்பகுதியில் என்னென்ன தேவை என்று தெரிந்து கொள்ள வாய்ப்பும் உள்ளது. முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் மானாமதுரை சி ப்காட்டில் வீடியோ கான் தொழிற்சாலை துவங்க ப்பட்டது.

தற்பொழுது செயல்படாமல் உள்ளது. அதே நிறுவனம் செயல்படவும் அல்லது வேறு நிறுவனத்தை வைத்து மீண்டும் செயல்படவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்புக்கு சென்றுள்ளார்கள். எனவே அந்தந்த பகுதியில் உள்ள தொழில் திறமை முனைவோரை கண்டுபிடித்து அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரவேண்டும் என்பதே முதல்வரின் விருப்பம் ஆகும். இந்த அரசின் நோக்கமாக உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை.யில் விரைவில் பெண்கள் அதிக அளவில் பணிபுரிவதற் கான தொழிற்சாலை துவங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கானாடுகாத் தான் உட்பட மாவட்டத்தில் விரைவில் தொழிற்சாலை துவங்குவதற் கான நடவடிக்கைகள் முதல்வர் ஆலோசனை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாவட்டத்தில் தொழிற்சாலை நிறைந்த மாவட்டமாக உருவாக்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி ராஜா பேசினார்.

'அமரன்' திரைப்படம் பார்த்து —

எங்கள் உழைப்பைப் பாராட்டிய முதல்வருக்கு நன்றி!

# ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு - இது ஒரு மறக்க முடியாத நிகழ்வு!

## நடிகர் சிவகார்த்திகேயன் வலைதளப் பதிவு



சென்னை, நவ.2-

'அமரன்' திரைப்படத்தைப் பார்த்து, அதில் நடித்த கலைஞர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டதையொட்டி, அதற்கு நன்றி தெரிவித்து நடிகர் சிவகார்த்திகேயன் விடுத்துள்ள பதிவில், "ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு இந்த நிகழ்வு மறக்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் சிவகார்த்திகேயனின் வலைதளப் பதிவு வருமாறு:-

**தங்களின் நேரத்தை ஒதுக்கி அமரன் திரைப் படத்தைப் பார்த்து, எங்கள் அனைவரின் உழைப்பையும் பாராட்டிய தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.**

**ஒரு அரசு அதிகாரியின் மகனான எனக்கு இந்த நிகழ்வு மறக்க முடியாதது.**

இவ்வாறு அப்பதிவில் நடிகர் சிவகார்த்திகேயன் குறிப்பிட்டுள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமாக உருவான தின விழா !

# விழாவை புறக்கணித்த முதலமைச்சர் உமர் அப்துல்லா!

ஜம்மு - காஷ்மீர் , நவ. 2 -

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமாக உருவான தின விழா நிகழ்வை உமர் அப்துல்லா புறக்கணித்ததற்கு துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்கா அதிருப்தி தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீரில் சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் தேசியமாநாடு கட்சி, காங்கிரஸ் கூட்டணி பெரும்பான்மையுடன் ஆட்சியை கைப்பற்றியது,

முதலமைச்சராக உமர் அப்துல்லா பதவியேற்றார். பதவியேற்றதுடன் ஜம்மு-காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கோரி அமைச்சரவை கூட்டி தீர்மானம் நிறைவேற்றினார். அத்தீர்மானத்திற்கு துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்கா ஒப்புதலும் அளித்தார்.

இந்த சூழ்நிலையில் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டதன் 5ம் ஆண்டு தின விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் உமர் அப்துல்லா மற்றும் ஆளும் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்காமல் புறக்கணித்தனர்.

இதனால், அதிருப்தி அடைந்த துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்கா, உமர் அப்துல்லாவை விமர்ச்சித்தார். இதனால், ஜம்மு-காஷ்மீரில் முதலமைச்சர் துணை நிலை ஆளுநர் இடையே மோதல் துவங்கியுள்ளது.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; " நம் நாட்டின் பலம் சனாதன தர்மத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது" என்று உத்தரப் பிரதேச பா.ஜ.க. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; தீபாவளியை ஒட்டி அவர் அப்படிக் கூறியிருக்கிறார்.**

**பொருளாதார முன்னேற்றம், வறுமையை ஒழித்து வளம் காண்பதில் மேம்பாடு, சமத்துவம் - சமூக நீதி - ஜனநாயகம் - ஆகிய முனைகளில் இடையறாத விழிப்புணர்வுடன் கூடிய கவனம், ஆகியவற்றில் இருக்கிறது நாட்டின் பலம் என்பது அறிஞர்களின் நிலைப்பாடு.**

**அவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு, சனாதன தர்மம் எனக் கூறுவதிலிருந்து, அவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்துவிட்டதை அவரே ஒப்புக் கொள்கிறாரோ ?**